முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved


வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Provincial Education Department (NWP)


மாகாணக் கல்வித் திணைக்களம் வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம் வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம் வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்

**GIT | T | I**

idudkH f;dr;re ;dlIKh I
**பொதுத் தகவல் தொழில்நுட்பம் II**
**General Information Technology (GIT) II**

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

තෙවන වාර විභාගය 2024(2025)
மூன்றாம் தவணைப் பரீட்சை 2024(2025)
Third Term Examination 2024(2025)

අමතර කියවීම් කාලය මිනිත්තු යි 10
மேலதிக வாசிப்பு நேரம் 10 நிமிடம்

12 වන ශ්‍රේණිය
தரம் 12
Grade 12

- **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**
- **தரப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகவும் பொருத்தமான விடையினை தெரிவு செய்து கோடிடுக.**

1. கணினியின் பரிணாம வளர்ச்சியுடன் முறைவழிப்படுத்தலுக்காக பல்வேறு தொழிநுட்பங்கள் பயன்படுத்தப்பட்டு வந்தன. அதற்கமைய கணினியின் தலைமுறைகளை நோக்கும் போது முதலாம் தலைமுறை தொடக்கம் ஐந்தாம் தலைமுறை வரையான சரியான கூற்றாக அமைவது எது?
   (1) முறைவழிப்படுத்தலின் வேகம் மற்றும் மின் நுகர்ச்சி அதிகம்.
   (2) இரண்டாம் தலைமுறைக் கணினிகளிலும் மூன்றாம் தலைமுறைக் கணினிகளிலும் முறையே வெற்றிடக் குழாய்கள், திரான்சிஸ்டர்கள் பயன்படுத்தப்பட்டன.
   (3) நுண்முறைவழியாக்கிகள் மற்றும் பணிசெயல்முறைமைகளுடன் கூடிய வரைவியல் பயனர் இடைமுகம் போன்றவை நான்காம் தலைமுறைக் கணினிகளில் பயன்படுத்தப்பட்டன.
   (4) ஒன்றிணைந்த சுற்றுக்கள், நான்காம் தலைமுறைக் கணினிகளில் பயன்படுத்தப்பட்டதோடு இயந்திர மொழியானது முதலாம் தலைமுறைக் கணினிகளில் மாத்திரமே பயன்படுத்தப்பட்டது.

2. கணினி வலையமைப்பாக்கமானது புவியியல் ரீதியாக நிறுவப்படும் பொழுது இடத்துரிப்பரப்பு வலையமைப்பு, பெருநகர்ப்பரப்பு வலையமைப்பு, பெரும்பரப்பு வலையமைப்பு என வேறுபடுத்தப்பட்டுள்ளதோடு அந்த வலையமைப்புக்களுக்கான உதாரணங்களின் சரியான ஒழுங்குமுறையாக அமைவது எது?
   (1) பாடசாலைக் கணினி வலையமைப்பு,வீட்டு கணினி வலையமைப்பு, இணையம்
   (2) பல்கலைக்கழக கணினி வலையமைப்பு, இணையம், பாடசாலைக் கணினி வலையமைப்பு
   (3) பாடசாலைக் கணினி வலையமைப்பு, வங்கி வலையமைப்பு, இணையம்
   (4) உடு வடிவ வலையமைப்பாக்கம், பாட்டை வடிவ வலையமைப்பாக்கம், வளைய வடிவ வலையமைப்பாக்கம்

3. மையமுறைவழி அலகின் பிரதான மூன்று பகுதிகளையும் கொண்ட விடையாக அமைவது எது?
   (1) சுட்டி, பளிச்சீட்டுச் செலுத்தி, தேக்க சாதனங்கள்
   (2) கட்டுப்பாட்டு அலகு, நினைவகப் பதிவகம், எண்கணித தர்க்க அலகு
   (3) உள்ளீட்டு சாதனங்கள், வெளியீட்டு சாதனங்கள், தேக்க சாதனங்கள்
   (4) பிரதான நினைவகம், தாய்ப்பலகை, தேக்க சாதனங்கள்.

4. கணினியில் தரவுகளைச் சேமிப்பதற்காக பின்வரும் தேக்க சாதனங்கள் பயன்படுத்தப்படுகின்றன.
**காந்த நாடாக்கள்(Magnetic tapes), பளிச்சீட்டு நினைவகம்(flash drives), இறுவட்டுக்கள்(CDs), நினைவாக அட்டைகள்(memory cards), நெகிழ்வட்டு(floppy discs), இலத்திரனியல் இறுவட்டுக்கள் (DVDs)**
பின்வருவனவற்றுள் தேக்க சாதனங்கள் பற்றிய சரியான கூற்றாக அமைவது எது?
(1) காந்த ஊடக சாதனங்களாக நெகிழ்வட்டுக்களும் DVDஆகியன பயன்படுத்தப்படும்..
(2) திண்மநிலை ஊடக சாதனங்களாக நினைவாக அட்டை, DVD மற்றும் CD ஆகியன பயன்படுத்தப்படும்.
(3) காந்த ஊடக சாதனங்களாக காந்த நாடாக்களும், நெகிழ்வட்டுக்களும் பயன்படுத்தப்படும்.
(4) காந்த நாடாக்கள்,பளிச்சீட்டுச் செலுத்திகள்,CD, DVD போன்றவற்றை தேக்க சாதனங்களாக பயன்படுத்த முடியாது

5. கணினி ஒன்றுடன் கணினி பாகங்கள் அல்லது வேறு கணினி ஒன்றை இணைக்க பயன்படுத்தப்படுவது துறைகள் எனப்படும். இங்கு சரியாக இணைக்கப்பட்ட சாதனங்களையும் துறைகளையும் கொண்ட விடை எது?.
A. HDMI - கணினி திரை
B. USB துறை- அச்சுப்பொறி
C. Network Port - வழிப்படுத்தி

(1) A மட்டும்
(2) B மற்றும் C மட்டும்
(3) A and C மட்டும்
(4) A மற்றும் B, C அனைத்தும்

6. தரவு பரிமாற்றத்தில் வழிபடுத்தப்பட்ட மற்றும் வழிப்படுத்தப்படாத ஊடகங்கள் பயன்படுத்தப்படுகின்றன. தரவு தொடர்பாடல் ஊடகங்கள் தொடர்பான சரியான கூற்று எது?
(1) வழிப்படுத்தப்பட்ட ஊடகங்களாக வானொலி அலைகள் மற்றும் ஓரச்சு வடம் ஆகியன பயன்படுத்தப்படும்.
(2) ஒளியியல் நார்களை விட அதிக வேகத்துடன் தரவு பரிமாற்றம் செய்வதன் காரணமாக முறுக்கிய கம்பி சோடிகள் தரவு தொடர்பாடலில் பயன்படுத்தப்படும்.
(3) ஒளியியல் நார்களில் ஒளிச் சமிக்ஞையாகவும் முறுக்கிய கம்பி சோடிகளில் மின் சமிக்ஞையாகவும் தரவுகள் பரிமாறப்படுகின்றன.
(4) வானொலி அலைகள் நுண்ணலைகளை விடவும் நீண்ட தூரம் தரவு பரிமாற்றம் செய்வதற்காக பயன்படுத்தப்படும்.

7. $40_{10}$, $46_8$ , $A2_{16}$ , $111011_2$ ஆகிய எண்களை ஏறுவரிசைப்படுத்தினால் வரும் சரியான விடை,
(1) $46_8$, $A2_{16}$, $111011_2$, $40_{10}$
(2) $40_{10}$, $A2_{16}$, $46_8$, $111011_2$
(3) $A2_{16}$, $111011_2$ , $46_8$, $40_{10}$,
(4) $46_8$ , $40_{10}$, $111011_2$ , $A2_{16}$

8. பின்வருவனவற்றுள் எது பிழையான கூற்றாகும்?.
(1) 4 GB கொள்ளளவினை கொண்ட ஒரு கோப்பை DVDல் சேமிக்க முடியும் என்பதோடு Blu-Ray வட்டில் சேமிக்க முடியாது.
(2) சேமிப்பு திறன் அளவீட்டு அலகுகளை ஏறுவரிசைப்படுத்தினால் வரும் ஒழுங்கானது பிட்டுக்கள் ,பைற்றுக்கள், கிலோ பைற்றுக்கள், மேகா பைற்றுக்கள், கிகா பைற்றுக்கள்,டெரா பைற்றுக்கள், பெடா பைற்றுக்கள்,என அமையும்.
(3) நினைவகப் பதிவகங்கள், DVD,RAM, பளிச்சீட்டு நினைவகம் ஆகிய நினைவக சாதனங்கள் கொள்ளளவின் அடிப்படையில் ஏறுவரிசைப் படுத்தப்பட்டுள்ளன.
(4) நினைவக பதிவகம் மற்றும் தற்போக்கு பெறுவழி நினைவகம் ஆகியவற்றில் தரவு மற்றும் தகவல்களை சேமித்து மீண்டும் மீண்டும் பாவனை செய்ய முடியாது.

අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

Past Papers Wiki

9. பின்வரும் கூற்றுகளில் சரியான கூற்று அல்லது கூற்றுக்களை தெரிவு செய்க.


**A** - ”A”பெரும் வழி இயல்பு ASCII குறிமுறையில் 1000001 என வகை குறிக்கப்படும் எனில் ”F” எனும் வழி இயல்பு 1000110 என வகை குறிக்கப்படும்.

**B** - BCD குறியீட்டு முறைப்படி வகை குறிக்கபடும் மிகப்பெரிய எண்ணாக 1001 உள்ளது.

**C** - சிங்களம் தமிழ் எழுத்துக்களை வகை குறிக்கவும் விஷேட குறியீடுகள் உருக்கள் ஆகியவற்றை வகை குறிக்கவும் ஒற்றை குறிமுறை பயன்படுத்தப்படும்.

(1) A மற்றும் C சரி (2) A, B, C சரி (3) A மட்டும் சரி (4) B, C சரி


10. கீழே கொடுக்கப்பட்டுள்ள தர்க்க வாயில்களுக்கான பெயர்களை சரியான வரிசையில் தேர்ந்தெடுக்கவும்.



(i) (ii) (iii)

(1) NOT, NOR, AND
(2) AND, OR, NAND
(3) NOR, NOT, AND
(4) NOT, AND, NOR

11. பின்வரும் தர்க்க சுற்றுக்கான பூலியன் கோவையை தெரிவு செய்க.




(1) $\overline{(A+B).(\overline{AB})}$
(2) $\bar{A}+\bar{B}$
(3) $\overline{AB}$ + A$\bar{B}$
(4) $\overline{\overline{AB}.\ AB}$

12. பின்வருவனவற்றுள் இணையத்துடன் இணைப்புச் செய்யப்பட்ட கணினி வலையமைப்பு ஒன்றின் நன்மை அல்லாதது எது?

(1) இணையத்துடன் இணைக்கப்பட்ட வேறு கணினி வலையமைப்புகளில் காணப்படும் கோப்பு சேவையகம் மூலம் காப்பு நகல் எடுத்தல்.
(2) வைரஸ் மற்றும் தீங்கு மயக்கும் மென்பொருள்களின் அபாயங்கள் குறைதல்
(3) இணையத்தின் பயன்பாடு
(4) வலையமைப்பினுள் வளங்களை பகிர்ந்து கொள்ளுதல்

13. சொல்முறை வழிப்படுத்தல் மென்பொருளில் பல குறுக்கு வழிச் சாவிகளை பயன்படுத்தி பல்வேறு செயற்பாடுகள் செய்யப்படுகின்றன. ஒரு ஆவணத்தை திறந்து அவ் ஆவணத்தை முழுமையாக தெரிவு செய்து அதனை பிரதி செய்து புதிய ஆவணம் ஒன்றைப் பெற்று அதில் பிரதி செய்த எழுத்துக்கள் பொருட்களை ஒட்டுதல் வேண்டும். அங்கு பயன்படுத்தப்படக்கூடிய குறுக்கு வழி சாவிகளைக் கொண்ட குழுவானது,.

A. Ctrl+N, Ctrl+O, Ctrl+ H
B. Ctrl+ V, Ctrl+C, Ctrl+A
C. Ctrl+O, Ctrl+S, Ctrl+N
D. Ctrl+O, Ctrl+F, Ctrl+S

இந்த குறுக்கு வழி சாவிகளின் சரியான ஒழுங்கு முறையை காட்டுகின்ற சரியான விடையாக அமைவது,

(1) A, B, C குழுக்கள் (2) A, C, D குழுக்கள்
(3) B, C குழுக்கள் (4) A, B குழுக்கள்

14. விரிதாள் மென்பொருள் தொடர்பான பின்வரும் கூற்றுக்களை கருதுக.

A. கணித்தல் குறியீடுகளை பயன்படுத்தி சூத்திரங்களை எழுத முடிவதோடு சார்புகளை பயன்படுத்தி சூத்திரங்களை எழுத முடியாது.

B. கலத்தினுள் உள்ள தரவுகளை முகப்பு அடையாளமாக வடிவமைப்பு செய்ய முடிவதோடு கலவீச்சை அவ்வாறு வடிவமைப்பு செய்ய முடியாது.

பின்வரும் விடைகளுள் முறையே உண்மை மற்றும் பொய் ஆக அமையும் கூற்றுக்கள்,

(1) A உண்மையாகும், கூற்று B பொய்யாகும்.
(2) A மற்றும் B பொய்யாகும்.
(3) A பொய்யாகும், கூற்று B உண்மையாகும்.
(4) கூற்று A உண்மையாகும் மற்றும் கூற்று B பொய்யாகும்.

15. கீழே தரப்பட்டுள்ளது ஒரு எழுது பொருள் விற்பனை நிலையம் (புத்தக விற்பனை நிலையம்) ஒன்றின் விரிதாள் ஒன்றின் பகுதியாகும்.

| | A | B | C |
|---|---|---|---|
| 1 | பென்சிலின் எண்ணிக்கை | ஒரு பென்சிலின் விலை | மொத்தப் பெறுமதி |
| 2 | 1 | Rs.40.00 | Rs.40.00 |
| 3 | 2 | | Rs.80.00 |
| 4 | 3 | | Rs.120.00 |
| 5 | 4 | | Rs.160.00 |

மேலே உள்ள பணித்தாளில் C நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள பென்சில்களின் பெறுமதியை கணிப்பதற்காக C3 இலிருந்து C5 வரையான ஏனைய கலங்களுக்கு பிரதி செய்யக் கூடிய வகையில் C2 கலத்தில் உள்ளிடக்கூடிய சரியான சூத்திரம் பின்வருவனவற்றுள் எது??

(1) = Sum(A1:B2)
(2) =AVERAGE (A2*B2)
(3) =A2*B$2
(4) =A1* $B$2

16. விரிதாள் மென்பொருளில் உள்ள தரவுகளை பயன்படுத்தி பல்வேறுபட்ட வரைபுகள் உருவாக்கப்பட்டு அவற்றை பயன்படுத்தி ஒப்பீடு செய்தல், பகுப்பாய்வு செய்தல் போன்றன நடைபெறும். இதில் ஒரு பாடசாலை மாணவர்களின் தரவுகள் அல்லது பொருட்களின் குழுவை சதவீதமாக ஒப்பிடுவது மற்றும் ஒரே நேரத்தில் ஒரு குழுவின் தரங்களை மதிப்பிடுவது போன்றவற்றிற்கு மிகவும் பொருத்தமான வரைபுகள் முறையே உள்ள சரியான விடையாக அமைவது?

(1) வட்ட வரைபு, கோட்டு வரைபு
(2) வட்ட வரைபு, நிரல் வரைபு
(3) சலாகை வரைபு, நிரல் வரைபு
(4) கோட்டு வரைபு, வட்ட வரைபு

17. பின்வரும் கூற்றுக்களுள் சரி அல்லாத ( உண்மை அல்லாத) கூற்றை தெரிவு செய்க,

(1) பணித்தாள் ஒன்று இரு பரிமாணத்தளத்தில் நிரல்கள்,மற்றும் நிரைகள் என்றவாறு அமையப்பெற்ற கலங்களின் தொகுப்புக்களைக் கொண்டு நிர்மாணிக்கப்பட்டுள்ள அதே வேளை நிரல்கள் ஆங்கில பேரெழுத்துக்கள் மூலம் பெயரிடப்பட்டுள்ளதோடு நிரைகள் இலக்கங்களைக் கொண்டு பெயரிடப்பட்டிருக்கும்.

(2) ஒரு பணித்தாளில் கணிப்பீடுகளை செய்வதற்காக முதலில் சமன் அடையாளத்தை இட்டு அதன் பின்னர் கல முகவரி, மாறிகள், செயல்பாடுகளை பயன்படுத்தி சூத்திரங்கள் அமைக்கப்படும்.

(3) சூத்திரங்களை உருவாக்கும் பொழுது சார்பான மற்றும் சார்பற்ற கல முகவரிகளை பயன்படுத்த முடியாது.


(4) பணித்தாள் ஒன்றில் கலத்தில் = 4/2*5+10-4 எனும் சூத்திரத்தை வழங்கும் பொழுது 16 எனும் பதில் கிடைக்கும் அத்துடன் இதனை கணிப்பதற்காக முன்னுரிமை ஒழுங்கு பயன்படுத்தப்படும்.

අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

Past Papers Wiki



18. நிகழ்த்துகை மென்பொருளில் பயன்படுத்தப்படும் காட்சிப்பட்டை ஆனது கீழே காட்டப்பட்டுள்ளது.




மேலே குறிப்பிடப்பட்டுள்ள காட்சி வகைகளின் பெயரை சரியாக குறிக்கும் விடை எது?

(1) A- வாசிப்பு பார்வை B – முழுமையான பார்வை C- படவில்லைகளின் வகைப்படுத்தல் பார்வை D - சாதாரண பார்வை
(2) A- முழுமையான பார்வை B - படவில்லைகளின் வகைப்படுத்தல் பார்வை C- வாசிப்பு பார்வை D - சாதாரண பார்வை
(3) A- வாசிப்பு பார்வை B - படவில்லைகளின் வகைப்படுத்தல் பார்வை C- முழுமையான பார்வை D - சாதாரண பார்வை
(4) A- சாதாரண பார்வை B - படவில்லைகளின் வகைப்படுத்தல் பார்வை C- வாசிப்பு பார்வை D - முழுமையான பார்வை

19. நிகழ்த்துகை மென்பொருளை பயன்படுத்துவது தொடர்பான சரியான கூற்றாக அமைவது,?

*கூற்று 1*
*தரமான நிகழ்த்துகை ஒன்றில், சொற்களின் எண்ணிக்கை,வாக்கிய அளவு,வரிசைகளின் அளவு, எழுத்துக்களின் அளவு, நிற அளவுதிட்டங்கள், அசைவூட்டம் மற்றும் ஒளியுருக்கள் ஆகியவற்றை கொண்டிருக்கும்.*

*கூற்று 2*
*நிகழ்த்துகை ஒன்றை உருவாக்குவதற்காக திறந்த மூல மென்பொருளாக Libre office impress ஐ பயன்படுத்த முடியும், என்பதோடு Cloud சேவையின் கீழ் Google Presentation ஐ பயன்படுத்த முடியும்.*

(1) கூற்று 1 மற்றும் கூற்று 2 இரண்டும் சரியானவை.
(2) கூற்று 1 பிழையானது, கூற்று 2 சரியானது.
(3) இரண்டு கூற்றுக்களும் சரியானவை.
(4) கூற்று 1 சரியானது, கூற்று 2 பிழையானது.

20. இலத்திரனியல் தரவுத்தளத்தை பற்றிய பின்வரும் கூற்றுக்களை கருதுக. அவற்றுள் பிழையான கருத்தினை கொண்ட விடையாக அமைவது,

(1) தரவுகளின் தனித்துவம் பேணல் மற்றும் தரவு மறுபதிவாக்கம் ஆகியவை தரவுத்தளம் ஒன்றின் பண்புகள் ஆகும்..
(2) முதன்மை சாவி மற்றும் சேர்மானச் சாவி ஆகியவை அட்டவணை ஒன்றில் உள்ள பதிவுகளை தனித்துவமாக காட்ட பயன்படுத்தப்படுகின்றன.
(3) தரவுத்தளம் ஒன்றிலே அட்டவணைகளுக்கு இடையிலான தொடர்புகள், ஒன்றுக்கு ஒன்று தொடர்புடைமை, ஒன்றுக்கு பல தொடர்புடைமை, பலவிற்கு - பல தொடர்புடைமை என காணப்படும்.
(4) இலத்திரனியல் தரவுத்தளம் ஒன்றை பயன்படுத்தி வினவல்களையும், அறிக்கைகளையும் தயாரிக்க முடியாது.

21. பின்வரும் சீர்மை வள இடப்படுத்தியை (URL)கருதுக.

*http://www.edupub.gov.lk/english/lesson.pdf*

A B C D

இங்கு A , B , C , D ஆகியவற்றை சரியான ஒழுங்கு முறையில் பெயரிடப்பட்டுள்ள விடையாக அமைவது,

(1) சேவை, செம்மை நடப்பு வழக்கு, ஆள் களப்பெயர், வளக்கோப்பு.
(2) செம்மை நடப்பு வழக்கு, சேவை, ஆள் களப்பெயர், வளக்கோப்பு.
(3) வளக்கோப்பு, சேவை, ஆள் களப்பெயர், செம்மை நடப்பு வழக்கு.
(4) சேவை, வலைத்தளம், வளக்கோப்பு, செம்மை நடப்பு வழக்கு.

22. பின்வருவனவற்றுள் பொய்யான கூற்றை தெரிவு செய்க.
(1) வலைப்பக்கத்தை வழங்கும் கணினி சேவையகம் அஞ்சல் சேவையகம் என்று அழைக்கப்படுகிறது.
(2) இணையப் பக்கங்களை வழங்கும் கணினிகள் இணைய சேவையகங்கள் என்று அழைக்கப்படுகின்றன.
(3) வலை மேலோடிகள், இணையத்தில் இணைய பக்கங்களை உலாவ பயன்படுகிறது..
(4) கணினி ஒன்றை அல்லது கணினி முறைமையை, பயனருக்கு தெரிந்தோ தெரியாமலோ தொலை அணுகல் மூலம் வேறு நபர்கள் அணுகலாம்.

23. மின்னஞ்சல் கணக்கு ஒன்றினை இலகுவாக பயன்படுத்துவதற்காக வேண்டி மின்னஞ்சல்கள் பின்வருமாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன.

**Inbox, Draft, Sent, Trash, Spam**

மேலே தரப்பட்ட வகைப்பாட்டிற்குரிய சரியான விளக்கத்தை தேர்ந்தெடுக்கவும்,

(1) பெறப்பட்ட அஞ்சல்கள் Inbox இல் சேமிக்க பட்டிருக்கும் அத்துடன் அழிக்கப்பட்ட அஞ்சல்கள் Trash இல் சேமிக்கப்பட்டிருக்கும்.
(2) அனுப்பப்பட்ட கடிதங்கள் Sent இல் சேமிக்கப்பட்டிருக்கும் அத்துடன் தேவையற்ற கடிதங்கள் Trash இல் சேமிக்கப்பட்டிருக்கும்.
(3) அனுப்பப்பட்ட கடிதங்கள் Draft ஆக கருதப்படும் மற்றும் அழிக்கப்பட்ட அஞ்சல்கள் Inbox இல் சேமிக்கப்பட்டிருக்கும்.
(4) Inbox மற்றும் Trash ஆகியவை மின்னஞ்சலில் இணைப்புக்கள் அனுப்புவதற்கு பயன்படும்.

24. முகில் கணினி பற்றிய எண்ணக்கருக்களில் சரியானதை தெரிவு செய்க.
(1) பிரயோக மென்பொருளை வழங்குவது மென்பொருள் சேவைக்கு சொந்தமானது.
(2) முகில் கணினி சேவைக்கு கீழே சேவையக கணினி, தீக்காப்புச்சுவர் போன்றவற்றை வழங்குவது அபிவிருத்திச் சூழல் சேவையின் பணியாகும்.
(3) மென்பொருள் தயாரிப்பு வசதிகளை வழங்குவது உட்கட்டமைப்பு சேவையின் கீழ் வரும் பணியாகும்.
(4) இணைய வசதி இன்றியும் முகில் கணினியின் சேவையினை பெற்றுக் கொள்ளலாம்.

25. பின்வரும் கூற்றுக்களுள் வர்ண மாதிரியம் தொடர்பான சரியான கூற்று எது??
(1) RGB வர்ண மாதிரியம் அதிகமாக தாள்களில் வண்ணங்களை அச்சிடுவதற்காக பயன்படுத்தப்படுகின்றது.
(2) மூல வர்ணங்களின் சேர்மானத்தால் இரண்டாம் நிலை வர்ணங்கள், மூன்றாம் நிலை வர்ணங்கள் உருவாக்கப்படுகின்றன.
(3) இரண்டாம் நிலை வர்ணங்களின் சேர்மானத்தால் மூல வர்ணங்கள் உருவாக்கப்படுகின்றன..
(4) RGB மற்றும் CMYK போன்ற வர்ண மாதிரியங்கள் ஒழுங்கு முறையே தாள்களிலும் டிஜிட்டல் திரைகளிலும் பயன்படுத்தப்படுகின்றன.

අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

26. சரியான விடை அடங்கும் கூற்றினைத் தெரிவு செய்க.
(1) வரைபு ஒன்றின் பருமனானது அதில் பயன்படுத்தப்பட்டிருக்கும் படமூலங்களின் எண்ணிக்கையிலேயே தங்கியுள்ளது.
(2) நெறிய வரைபு ஆனது படமூலங்களினால் உருவாக்கப்படுவதோடு பரவல் வரைபு ஆனது கேத்திர கணித உருக்களினால் உருவாக்கப்பட்டுள்ளன.
(3) வரைபொன்றை சேமிக்கும் போது நெருக்கத்திற்காக பாவிக்கப்படுகின்ற கோப்பு வகைகளின் தன்மையிலேயே கோப்பிற்கு ஏற்படும் , பாதிப்பு அல்லது பாதிப்பின்மை தீர்மானிக்கப்படும்.
(4) GIF மற்றும் PNG கோப்பு வகைகள் பாதிப்பு நெருக்கம் ஆன கோப்பு வகைகள் எனவும் JPEG மற்றும் BMP பாதிப்படையாத நெருக்கமான கோப்பு வகைகள் எனவும் அறியப்படும்.

27. பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.
A. கட்புல திரிபுக் காட்சிகள் உருவாக்கப்படுவது ட்வீன் சட்டகத்திலேயாகும்.
B. ஒளியியல் அசைவூட்ட வடிவமைப்பிற்காக பல சட்டகங்கள் பயன்படுத்தப்படுகின்றன.
மேலே உள்ளவற்றில் சரியானது எது?
(1) A , B ஆகிய இரண்டு கூற்றுக்களும் சரியானவை.
(2) A மட்டும் சரியானது.
(3) B மட்டும் சரியானது.
(4) மேற்கூறப்பட்ட எதுவுமே சரியானது அல்ல.

28. பின்வருவனவற்றில் ஒலி மற்றும் காணொளிகளை உருவாக்குவதற்குப் பயன்படும் கணினி மென்பொருள் எது?.
(1) Dia மற்றும் Movie Maker
(2) Audacity மற்றும் Movie Maker
(3) Audacity மற்றும் Dia
(4) Motion Box மற்றும் Audacity

29. பின்வருவனவற்றில் சரியானது எது?
(1) HTML மற்றும் CSS ஆகியவை செய்நிரலாக்க மொழிகளாகும்.
(2) MySQL, php, Apache ஆகியவை தனித் தொகுப்புகளாக பதிவிறக்கம் செய்யக் கிடைக்கின்றன.
(3) நிலைத்த மற்றும் இயங்குநிலை இணையத்தளங்கள் HTML ஐ மாத்திரம் பயன்படுத்தியே உருவாக்கப்படுகின்றன.
(4) வளமுகாமைத்துவ முறையைப் பயன்படுத்தி இலகுவாக இணையத்தளங்களை உருவாக்க முடியாது.

30. பின்வரும் கூற்றுக்களில் இருந்து HTML இன் பட்டியல்கள் சம்பந்தமான சரியான கூற்றை தெரிந்து எடுக்கவும்.
(1) ஒழுங்கமைக்கப்படாத பட்டியல் <ol> எனப்படும்.
(2) ஒழுங்கமைக்கப்பட்ட பட்டியல் <ul> என பொருள்படும்.
(3) ஒழுங்கமைக்கப்பட்ட பட்டியல் <ol> என பொருள்படும்.
(4) ஒழுங்கமைக்கப்பட்ட பட்டியல், குண்டுக்குறிப் பட்டியல் எனப்படும்.

31. தகவல் தொழிநுட்பத்துடன் பிரச்சினைகள் தொடர்பான சட்டப் பிரச்சினைகளுடன் கூடிய பதிலை தெரிவு செய்க.
(1) எழுத்துத் திருட்டு, கடவுச்சொற்களை பயன்படுத்துதல், வைரஸ்களை நிறுவுதல்.
(2) பிரத்தியேக தரவுகளைக் களவாடுதல், அனுமதியின்றிய பிரவேசம் ,மோசடிகள்.
(3) நுண்ணறிவுச் சொத்தைக் களவாடல், எழுத்துத் திருட்டு, தீச்சுவரினை நிறுவுதல்.
(4) வன்வட்டு செயலிழத்தல், வன்தீச்சுவர்களை நிறுவுதல், நுண்ணறிவுச் சொத்தைக் களவாடல்.

32. பின்வருவனவற்றுள் தீங்கு பயக்கும் மென்பொருட்கள் கணினியில் நிறுவப்படக் கூடிய விதமாக அமைவது எது?

(1) நச்சு நிரல் எதிர்ப்பு மென்பொருட்களை கணினியில் நிறுவுதல்.

(2) பாதுகாப்பான இணையத்தளங்களுக்குள் பிரவேசித்தல்.

(3) சட்டரீதியான மென்பொருட்களை கணினியில் நிறுவுதல்.

(4) சந்தேகத்திற்கிடமான மின்னஞ்சல் இணைப்பொன்றை திறத்தல்.

33. பின்வரும் கூற்றுக்களுள் சரியானது எது?

(1) இலங்கையின் இணையப் பாதுகாப்பிற்காக வேண்டி ICTA நிறுவனம், இலங்கை நியமங்கள் நிறுவனம்,இலங்கை கணினி அவசரத் தயார்நிலைக் குழு போன்ற நிறுவனங்கள் செயற்பட்டு வருகின்றன.

(2) தீங்கு பயக்கும் மென்பொருள்களில் இருந்து கணினி அல்லது கணினி முறைமையை பாதுகாக்க சொல்முறைவழிப்படுத்தல் மென்பொருளானது பயன்படும்.

(3) கணினி அல்லது கணினி முறைமையை பௌதீக ரீதியாக பாதுகாப்பதற்கு பாதுகாப்பு கடவுச்சொற்கள் , தீச்சுவர் , எழுச்சிப்பாதுகாப்பி போன்றவற்றை பயன்படுத்த முடியும்.

(4) மீள்வரும் தகைப்புக்காயம், மணிக்கட்டுச் சுரங்கச் சகசம், கணினிப் பார்வை சகசம் போன்றவை கணினி சார்ந்த உடல்நலப் பிரச்சினைகள் அல்ல.

34. பிழையான விடையினைத் தெரிவு செய்க.

(1) இலக்கமுறை இடைவெளியை நீக்குவதற்காக இலக்கமுறைப்பாலம் உருவாக்கப்பட்டுள்ளது.

(2) இலக்கமுறை அறிவினைப் பெற்றுக் கொள்வதனூடாக இலக்கமுறை இடைவெளியை நீக்கலாம்.

(3) திறனகற்றல் ஆனது தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப வளர்ச்சியின் மற்றுமொரு பக்க விளைவாகும்.

(4) இலக்கமுறை இடைவெளியானது தகவல் தொடர்பாடல் தொழினுட்பத்தின் மூலம் ஏற்படும் சமூகப் பிரச்சினை ஒன்று அல்ல.

35. தகவல் தொடர்பாடல் தொழினுட்பத்தின் சமூக விரோதப் பாவனைக்கு உதாரணமாக அமைவது,

(1) சமூக வலைத்தளங்களினூடாக சமூகத் தொடர்புகளை ஏற்படுத்துவது.

(2) இணையத்தினூடாக பொருட்களை விற்பனை செய்தல் மற்றும் வாங்குதல்

(3) கலந்துரையாடல் களங்களைப் பயன்படுத்தி தனிநபர்கள் தனது பொதுக் கருத்துக்களை முன்வைத்தல்.

(4) தனிநபர்களின் நற்பெயருக்கு களங்கம் விளைவிக்கும் வகையில் போலியான தகவல்களை இணையத்தினூடாக பிரச்சாரம் செய்தல்.

36. முறைமை விருத்தி வாழ்க்கை வட்டத்தின் விருத்திப் படிமுறையின் சரியான ஒழுங்கினைத் தெரிவு செய்க.

(1) முறைமைத் திட்டமிடல், தேவைகளை இனங்காணல், முறைமைப் பாதுகாப்பு,தீர்வினை வடிவமைத்தல்

(2) தீர்வினைக் குறிமுறைப்படுத்தல், தீர்வினை வடிவமைத்தல், தீர்வினை நடைமுறைப்படுத்தல்,முறைமையை பராமரித்தல்.

(3) தேவைகளை இனங்காணுதல்,தீர்வினை வடிவமைத்தல், தீர்வினை சோதித்துப் பார்த்தலும் தவறு நீக்கலும்,தீர்வினை நடைமுறைப்படுத்தல்.

(4) தீர்வினை வடிவமைத்தல்,முறைமையை பராமரித்தல்,தீர்வினை சோதித்துப் பார்த்தலும் தவறு நீக்கலும்,தீர்வினை நடைமுறைப்படுத்தல்.

අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

Past Papers Wiki



37. கீழே காணப்படுவது கணினியின் பாகங்கள் சம்பந்தமான சில விவரக்குறிப்புக்கள் ஆகும்.
   - *A. Processor spead 3.00 GHz*
   - *B. LED Display 24"*
   - *C. SSD 128 GB (6 gbps spead)*
   - *D. 3 year warrenty*
   - *E. wireles mouse and keyboard*
   - F. *Rs. 120 000.00 (3 Installments)*

   மேற்கூறப்பட்டவற்றில் தொழிநுட்பம் சார்ந்த விவரக்குறிப்புக்கள் மட்டும் அடங்கிய விடையாக அமைவது ஆகும்.

   1. A , B , C
   2. A , B , F
   3. C , D , E
   4. C , E , F

38. சொல்முறைவழிப்படுத்தல் மென்பொருள் தொடர்பான பின்வரும் கூற்றுக்களை கருதுக.
   - A. *சொல்முறைவழிப்படுத்தல் மென்பொருளினுள் நிறுவப்பட்டிருக்கும் அகராதியில் புதிய சொற்களை உட்சேர்க்க முடியும்.*
   - B. *அஞ்சல் இணைப்பு வசதியை பயன்படுத்துவதன் மூலம் ஆவணங்கள் தயாரிக்க முடியும்.*
   - C. *சொல்முறைவழிப்படுத்தல் மென்பொருளினைப் பயன்படுத்தி மின்விரிதாள் போன்ற ஒரு தரவுத்தளத்தை நிர்மாணிக்க முடியும்..*

   மேலே உள்ள கூற்றுக்களுள் சரியான கூற்றை விடையாகத் தெரிவு செய்க.

   1. A மற்றும் B மட்டும்
   2. A மற்றும் C மட்டும்
   3. B மற்றும் C மட்டும்
   4. A , B , C அனைத்தும்

39. பாடசாலை மாணவர்களது புள்ளிப் பெறுபேற்று அறிக்கையின் சாராம்சத்தை பெற்றோருக்கு முன்வைக்க பொருத்தமான மென்பொருள் வகையாக அமைவது எது?
   1. விரிதாள் மென்பொருள்
   2. சொல்முறைவழிப்படுத்தல்
   3. தரவுத்தள மென்பொருள்
   4. பிரத்தியேக மென்பொருள்

40. பின்வருவனவற்றுள் தேடற் பொறி மற்றும் வலை மேலோடியினை முறையாகக் குறிக்கும் விடையாக அமைவது எது?.
   1. Mozella fire fox, Google chrome
   2. Google chrome , www.edupub.gov.lk
   3. Google , Google chrome
   4. Mac OS , Safari

முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Provincial Education Department (NWP)

GIT | T | II

idudkH f;dr;re ;dlIKh II
பொதுத் தகவல் தொழில்நுட்பம் II
General Information Technology (GIT) II


තෙවන වාර විභාගය 2024(2025)
மூன்றாம் தவணைப் பரீட்சை 2024(2025)
Third Term Examination 2024(2025)

12 වන ශ්‍රේණිය
தரம் 12
Grade 12

அறிவுறுத்தல்கள் :

- **நான்கு வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக.**

(01) (a) கணினி அமைப்பின் தொகுதி வரைபடம் கீழே காட்டப்பட்டுள்ளது.




i. A, B, C, D மற்றும் E எழுத்துக்களால் குறிக்கப்பட்டுள்ள கூறுகளை பெயரிடுக.


ii. A,D மற்றும் E ஆகிய ஒவ்வொரு கூறுகளுக்கும் இரண்டு உதாரணங்களை எழுதுக.

iii. மேலே உள்ள கணினி முறைமையானது பல வகையான எண்களைப் பயன்படுத்தி கணித்தல் வேலைகளை செய்யக்கூடியது. இச்செயல்பாடு எந்தக் கூறில் நடைபெறும்?

iv. பின்வரும் ஒவ்வொரு செயலுக்கும் பொருந்தும் கூறினை A, B, C, D, E ஆகியவற்றிலிருந்து அடையாளம் கண்டு எழுதுக.


1. கடிதத்தை தட்டச்சு செய்தல்.
2. அந்த கடிதத்தை சேமித்தல்.
3. அந்த கடிதத்தை அச்சிடுதல்.

(b) பின்வரும் வரைபடம் ஒரு கணினி முறைமையை விளக்குகிறது.





i. x என அடையாளப்படுத்தப்பட்ட அடுக்கினை பெயரிடுக.
ii. x எனும் அடுக்கு மற்றும் வன்பொருள் ஆகியன மூலம் செய்யப்படும் ஒவ்வொரு செயற்பாட்டை எழுதவும்.
iii. பிரயோக மென்பொருள் அடுக்கின் ஒரு பகுதியாகக் கருதக்கூடிய மென்பொருள் ஒன்றுக்கு உதாரணம் தருக.

(02) (a) மின்சாரத்தினால் இயங்கும் ஒரு மின்விசிறிக்கான தர்க்கச் சுற்றானது கீழே தரப்பட்டுள்ளது. இது வெப்பநிலை உயர்வாக இருக்கும் போதும் மின் ஆளி திறக்கப்பட்டிருக்கும் போதும் இயங்கும், எனின் P மற்றும் Q இற்கான தர்க்கப்படலைகளை எழுதுக






(b) பின்வரும் உருவிலே தரப்பட்டுள்ள தர்க்கச்சுற்றை அவதானிக்கவும்.




i. மேலே உள்ள தர்க்கச்சுற்றிற்குரிய பூலியன் கோவையை எழுதுக.
ii. மேலே உள்ள தர்க்கச்சுற்றிற்கான உண்மை அட்டவணையை தருக.

(03) (a) கீழே தரப்பட்டுள்ளது சொல்முறைவழிப்படுத்தல் மென்பொருளின் மூலம் உருவாக்கப்பட்ட ஆவணம் மற்றும் அதில் உள்ள வசதிகளைப் பயன்படுத்தி மெருகூட்டப்பட்ட பின்னர் கிடைக்கும் விதம் போன்றவற்றை காட்டுகின்றது.




අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

Past Papers Wiki

A தொடக்கம் D வரையான எழுத்துக்களால் குறிக்கப்பட்டுள்ள பகுதிகளுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ள வடிவமைப்பு கருவிகளுக்கு பொருத்தமான இலக்கங்களை, கீழே இலக்கமிடப்பட்டுள்ள கருவிகள் அட்டவணையிலிருந்து தெரிந்தெடுத்து விடைத்தாளில் எழுதுக.

(b) கீழே காட்டப்பட்டுள்ள விரிதாள் பகுதியானது 2023 ஆம் ஆண்டிற்கான மாதாந்த கறுவாப்பட்டை விற்பனைகளை காட்டுகின்றது.

| | A | B | C |
|---|---|---|---|
| 1 | **ஒரு கிலோ கறுவாப்பட்டையின் விலை** | | |
| 2 | **மாதம்** | **விலை (ரூபா)** | **விலை வேறுபாடு** |
| 3 | 2022 டிசம்பர் | 715.50 | |
| 4 | 2023 ஜனவரி | 775.50 | |
| 5 | 2024 பெப்ரவரி | 850.50 | |
| 6 … 13 | | | |
| 14 | 2023 டிசம்பர் | 890.50 | |
| 15 | 2023 ஜனவரி | 690.50 | |
| 16 | 2023 சராசரி விலை | | |

மேலே உள்ள விரிதாள் பகுதியினை பயன்படுத்தி பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்கவும்.

i. 2023 ம் ஆண்டின் கறுவாப்பட்டை விற்பனையின் சராசரி விற்பனை மதிப்பினைக் கணக்கிட B16 கலத்தில் =Function 1(Cell1:Cell2) என்றவாறான சார்பினை வழங்க வேண்டும். Cell1,Cell2 ஆகிய கலங்களுக்கு பொருத்தமான கலப்பெயர்களை வழங்கி சார்பினை எழுதுக.

ii. 2023 ஆம் ஆண்டு டிசம்பர் மாத கறுவாப்பட்டையின் சராசரி விற்பனை விலையில் ஏற்பட்ட மாற்றத்தைக் காட்டுவதற்காக கலம் C15 இல் பயன்படுத்தப்பட வேண்டிய சூத்திரத்தை எழுதுக.(விலையில் ஏற்பட்ட மாற்றம் = டிசம்பர்விலை - நவம்பர் விலை)

iii. C15 கலத்தில் உள்ள சூத்திரத்தை C4 கலத்திற்கு பிரதி செய்தால் C4 கலத்தில் தோன்றும் சூத்திரம் யாது?

iv. 2023 ஆண்டிற்கான கறுவாப்பட்டை விற்பனையின் சராசரி மாதாந்த விற்பனை விலைகளில் உள்ள மாற்றத்தை காட்ட, விரிதாள் மென்பொருளில் பயன்படுத்தக்கூடிய பொருத்தமான இரண்டு வரைபு வகைகள் எவை?

v. ஒவ்வொரு மாதத்திற்குமான ஒரு கிலோ கறுவாப்பட்டையின் விலையை வரைபில் காட்ட தெரிவு செய்யப்பட வேண்டிய கலவீச்சு யாது?

(04) (a) நிகழ்த்துகை மென்பொருளுடன் தொடர்புடைய கீழ்க்காணும் வாக்கியங்களிலுள்ள இடைவெளிகளை பூர்த்தி செய்ய ஏற்ற மிக பொருத்தமான சொற்களை, கீழே தரப்பட்டுள்ள அடைப்புக்குறிக்குள் இருந்து தெரிந்து வினா இலக்கங்களுக்கு முன்னால் எழுதுக.

i. சாவிப்பலகையில் F5 சாவியை அழுத்துவதன் மூலம் ஒரு .................................... சாத்தியமாகும் .

ii. ஒரு படவில்லையின் திசையை மாற்றுவது ................................. சாளரம் மூலம் செய்யப்படும்.

iii. ஒரு படவில்லையில் இருந்து மற்றொரு படவில்லைக்கு மாறும் பொழுது நிகழ்த்துகையின் முழுமையான பார்வை(slide show) யில் ஏற்படும் சலனம் ...................................................... என அழைக்கப்படும்..

iv. ஒரு படவில்லையை சுருக்கமான வடிவத்தில் காட்சிப்படுத்துதல் ..................................... பார்வை எனப்படும்.

v. குறுக்கு வழிச் சாவி Ctrl+M ஆனது ஒரு ............................. ஐ நிகழ்த்துகையில் உட்புகுத்த பயன்படுகிறது.

[List – முழுப்பார்வை (slide show) / அசைவூட்டம் (animation) / உதவிச் சாளரம் (help window) / படவில்லைத் தளக்கோளம் (slide layout) /பக்க தளக்கோளம் (page layout ) / படவில்லைத் தகவல் (slide transition) /படவில்லைகளின் வகைப்படுத்தல் (slide sorter) /புதிய படவில்லை (new slide) / படவில்லைகளின் வகைப்படுத்தல் பார்வை (slide sorter view) ]

(b) கற்றல் நிலையமொன்றினால் பராமரிக்கப்படும் இலத்திரனியல் நூலகம் ஒன்றின் தரவுத் தளத்தில் DVD_Details, Student_Details மற்றும் Borrowing_Details ஆகிய மூன்று அட்டவணைகள் காணப்படுகின்றன. அதற்கான மாதிரிப்படம் கீழே தரப்பட்டுள்ளது.

| DVD_Details | | | | | |
|---|---|---|---|---|---|
| **DVD_Code** | **DVD _Name** | **Version** | **Publisher** | **Price** | **Published_Year** |
| SIN003 | Sinhala Grammar-O/L | 2.0 | NIE | Rs 120.00 | 1997 |
| ENG001 | English Grammar-G10 | 2.2 | DOE | Rs 60.00 | 1998 |
| HIS025 | Kingdoms | 1.3 | Softtech Videos | Rs 150.00 | 2001 |
| SCN223 | Human Body | 1.1 | DOE | Rs 50.00 | 1996 |
| TAM001 | Alphabet | 3.2 | NIE | Rs 120.00 | 2016 |

| Student_details | | | | |
|---|---|---|---|---|
| **Admission_No** | **Student_Name** | **Date_Of_Birth** | **Gender** | **Admitted_Year** |
| 1001 | Kamal | 12/03/2002 | M | 2008 |
| 1002 | Mihiri | 08/23/2002 | F | 2009 |
| 1003 | Malithi | 05/05/2004 | F | 2010 |
| 1004 | Ravindu | 07/17/2005 | M | 2008 |
| 1005 | Bhanu | 09/09/2005 | M | 2007 |

| Borrowing_Details | | |
|---|---|---|
| **Admission_No** | **DVD_Code** | **Date_Borrowed** |
| 1003 | SIN003 | 06/25/2018 |
| 1005 | SCN223 | 05/08/2018 |
| 1002 | HIS025 | 01/27/2018 |

i. மேலே உள்ள தரவுத்தளத்திற்கு ஏற்ப 2 முதன்மை சாவிகள் மற்றும் அவற்றின் அட்டவணைகளை எழுதுக.
ii. English Grammar-G10 என்ற புதிய DVD ஒன்றை மத்திய நிலையம் வாங்கியுள்ளது. இந்த புதிய DVD ஐ DVD_Details அட்டவணையில் சேர்க்கும் போது, ENG001 என்ற DVD குறியீட்டினை பயன்படுத்த முடியாது. காரணத்தை விளக்குக.
iii. Borrowing_Details அட்டவணையில் ஒவ்வொரு புலத்திற்கும் பயன்படுத்தக்கூடிய தரவு வகைகளை எழுதுக
iv. “Alphabet” DVD ஆனது 10/07/2018 அன்று மிஹிரி அவர்களால் வழங்கப்பட்டுள்ளது. அதற்கான பதிவை Borrowing_Details அட்டவணையில் சேர்க்கவும்.

(05) (a) 1 தொடக்கம் 5 என இலக்கமிடப்பட்ட இடைவெளிகளுடன் கூடிய பின்வரும் பந்தியை அவதானிக்கவும்.

அமலினால்(1)............................................இல்(2).....................................இனுள் இணையத் தளத்தில்(3)....................................................உள்ளிடப்பட்டு பரீட்சை திணைக்களத்தின் இணையத்தளத்தில் நுழையப்பட்டது.முதல் இணையப்பக்கத்தில் இருக்கும் (4) .............................................இன் மேல் சொடக்குவதன் ஊடாக உரிய இணையப்பக்கம் பெற்றுக்கொள்ளப்பட்டது.பரீட்சைகள் திணைக்களத்தின் இணையத்தளம் (5) .................................இல் www சேவைக்கு உட்பட்டது.

අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාළ ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

Past Papers Wiki



மேலே பந்தியில் உள்ள இடைவெளிகளை நிரப்புவதற்கு மிகவும் பொருத்தமான சொற்களை கீழே கொடுக்கப்பட்ட பட்டியலிலிருந்து தேர்ந்தெடுத்து பந்தியிலுள்ள எண்களுக்கு முன்னால் எழுதுக.

[List - முகவரிப் பட்டி (address bar), மின்னஞ்சல்(email), மீயிணை (hyperlink) ,இணையம்(internet), சீர்மைவளஇடப்படுத்தி(URL), வலை மேலோடி(web browser), உலகளாவிய வலை(WWW) ]

(b) படம் 1 இல் காட்டப்பட்டுள்ள மாதிரி இணையப்பக்கமானது படம் 2 இல் காணப்படும் மூலக் குறியீடுகளைக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது என்பதனை கருத்திற் கொள்க.

படம் 1




படம் 2

```
<html>
 < 1 >
  <title>Business Site </title>
 </ 1 >
 < 2 >
  < 3 >
   < 4 >Project Site Creation</ 4 >
   < 5 src="Lorgo.jpg"></ 3 >
   < 6 >
   < 7 > Create site as simply as writing a doc through an intuitive editor. That means
     teams don't have to rely on IT specialists or web developers.</ 7 >
   < 8 >RESOURCES</ 8 >
   < 9 >
    <li>6 Month course</li>
    <li>One year course
      < 10 type=square>
      <li>Blog</li>
      <li> Documents</li>
      <li>Videos</li>
      <li>Project Search</li>
     < 10 >
    </li>
   </ 9 >
  <a href="https://apps.google.com/index"> Join with us and learn more</a>
 </ 2 >
</html>
```

படம் 2 இல் காணப்படும் (1) தொடக்கம் (10) வரை இலக்கமிடப்பட்ட இடங்களுக்கு பொருத்தமான HTML ஒட்டுக்களை கீழே தரப்பட்ட பட்டியலில் இருந்து தெரிந்து எழுதுக. பட்டியல்**:** **[** img, ol, head , body, hr, ul , center , h1 , p , h3 **]**

(06) (a) தகவல் தொழில்நுட்பத்துடன் தொடர்புடைய சில ஆபத்துகள் கீழே (A) முதல் (D) வரை குறிப்பிடப்பட்டுள்ளன.

A. வன்வட்டின் செயலிழப்பினால் பயனரின் கோப்புறை மற்றும் கோப்புறைகள் காணாமல் போதல்.
B. பளிச்சீட்டுச் செலுத்தியை பயன்படுத்திய பின்னர் கணினி வழமைக்கு மாறாக தொழிற்படல்
C. இணையத்துடன் இணைக்கப்பட்ட கணினியின் தரவுகளில் அனுமதியின்றிய தொலை அணுகல்
D. தனியாள் கணினிக்கு மின்வழங்கும் பிரதான மின்வழங்கலில் அடிக்கடி மின்சாரம் தடைப்படுதல்.

மேலுள்ள ஆபத்துகளை குறைப்பதற்கான பொருத்தமான தீர்வுகளை (P) முதல் (U) வரை உள்ள பட்டியலிலிருந்து தேர்ந்தெடுத்து பொருத்தமான லேபிளுடன் இணைத்து எழுதுக.

**List : (P)** அடிக்கடி காப்பு நகல் எடுத்தல்**(Taking frequent backups), (Q)** மூடிய சுற்றுக் தொலைக்காட்சிகளை நிறுவுதல்**(Installing CCTV), (R)**தீச்சுவர்களை நிறுவுதல்**(Installing firewalls) , (S)** எழுச்சிப் பாதுகாப்புக்களை பயன்படுத்துதல் **(Using surge protectors), (T)** தடைப்படாத மின்வலு வழங்கலை பயன்படுத்துதல் **(Using an uninterruptible power supply UPS),(U)** நச்சுநிரல் எதிர்ப்பு மென்பொருட்களை பயன்படுத்துதல்**(Using Antivirus software )**

(b) கீழே தரப்பட்டுள்ள தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்ப துறையில் பாதுகாப்பு தொடர்பான பிரச்சினைகளை உள்ளடக்கிய 1 முதல் 4 வரையான கூற்றுக்களை கவனிக்கவும்.

i. தீங்குபயக்கும் மென்பொருள்கள் (malware) தன்னைத்தானே பெருக்கச் செய்து ஏனைய கணினிகளுக்கும் பரவுதல்.
ii. மின்னஞ்சல் மென்பொருளில் உள்பெட்டிக்கு(inbox) வேண்டப்படாத மின்னஞ்சல்கள் (unsolicited e-mails) கிடைக்கப்பெறுதல்.
iii. ஒரு நம்பகமான நபர் போல நடித்து யாரவது ஒருவரின் வங்கிக் கணக்கின் பயனர் பெயர் (username) மற்றும் கடவுச்சொல்லை (password) பெற முயற்சித்தல்.
iv. வலைப்பக்கத்தில் தேவையற்ற விளம்பர பாப்-அப்களைக்( pop-up)காண்பித்தல்

மேலே கொடுக்கப்பட்டுள்ள 1 முதல் 4 வரையிலான கூற்றுக்களுக்கும் பொருந்தக்கூடிய சொல்லை கீழுள்ள பட்டியலில் இருந்து தேர்ந்தெடுத்து வினா எண்ணுக்கு முன்னால் எழுதவும்.

List: (அனாவசிய விளம்பரங்கள் (adware), விரும்பா அஞ்சல்( spam), பிஷிங்( phishing), பொற்ஸ் (bots), கணினி வேம்கள் (computer worms), தீச்சுவர் (firewalls) )

අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න


**வடமேல் மாகாண கல்வி திணைக்களம்**

மூன்றாம் தவணைப்பரீட்சை - தரம் 12 – 2024
பொதுத்தகவல் தொழிநுட்பம்

விடைத்தாள் - i

| வினா எண் | விடை | வினா எண் | விடை | வினா எண் | விடை | வினா எண் | விடை |
|---|---|---|---|---|---|---|---|
| **1.** | 3 | **11.** | 1 | **21.** | 2 | **21.** | 2 |
| **2.** | 3 | **12.** | 2 | **22.** | 1 | **32.** | 4 |
| **3.** | 2 | **13.** | 3 | **23.** | 1 | **33.** | 1 |
| **4.** | 3 | **14.** | 2 | **24.** | 1 | **34.** | 4 |
| **5.** | 4 | **15.** | 3 | **25.** | 2 | **35.** | 4 |
| **6.** | 3 | **16.** | 2 | **26.** | 3 | **36.** | 3 |
| **7.** | 4 | **17.** | 3 | **27.** | 1 | **37.** | 1 |
| **8.** | 1 | **18.** | 4 | **28.** | 4 | **38.** | 1 |
| **9.** | 2 | **19.** | 4 | **29.** | 2 | **39.** | 4 |
| **10.** | 2 | **20.** | 2 | **30.** | 3 | **40.** | 3 |

விடைத்தாள் - ii

| வினா எண் | விடை | புள்ளிகள் |
|---|---|---|
| (01) (a) (i) | A. உள்ளீட்டுச் சாதனங்கள்<br>B. எண்கணித மற்றும் தர்க்க அலகு<br>C. தற்போக்கு பெறுவழி நினைவகம்<br>/ முதன்மை நினைவகம்<br>D. துணை நினைவகம்<br>E. வெளியீட்டு சாதனங்கள் | 5 |
| (ii) | A. சாவிப்பலகை / சுட்டி<br>D. CD / DVD/ BLU - RAY / MEMORY CHIP<br>HDD/ SSD (M.2 or NVME)<br>E. எண்கணித தர்க்க அலகு | 1.5 |
| (iii) | எண்கணித தர்க்க அலகு | 1.5 |
| (iv) | 1- A சாவிப்பலகை<br>2- D வன்வட்டு<br>3- E அச்சுப்பொறி | |
| (b) | (i) முறைமை மென்பொருள்<br>(ii) வன்பொருள் முகாமை, பயனர் இடைமுகத்தை வழங்கல்<br>(iii) சொல்முறை வழிப்படுத்தல் மென்பொருள்<br>(iv) விரிதாள் மென்பொருள் | 4 |
| (02) (a) (i) | P- AND Q- NOT<br><br> | 4 |

| | | |
|---|---|---|
| (b) (i) | $\overline{AB} + \bar{A}$ | 3 |
| (ii) | (table below) | 8 |

| A | B | $\overline{AB}$ | $\bar{A}$ | $\overline{AB} + \bar{A}$ |
|---|---|---|---|---|
| 0 | 0 | 1 | 1 | 1 |
| 0 | 1 | 1 | 1 | 1 |
| 1 | 0 | 1 | 0 | 1 |
| 1 | 1 | 0 | 0 | 0 |


| | | |
|---|---|---|
| (03) (a) | A- 6 (1 புள்ளி)<br>B- 7/3/5 (2 புள்ளிகள்)<br>C- 2 (1 புள்ளி)<br>D- 4 (1 புள்ளி) | 5 |
| (b) | I. = Average ( B3:B15)<br>II. = B15 – B14<br>III. = B4 – B3<br>IV. நிரல் வரைபு/ சலாகை வரைபு<br>V. A2:B15 or A3:B15 | 10<br>(2x5) |
| (04) (a) | I. முழுப்பார்வை (Slide show)<br>II. படவில்லைத் தளக்கோளம் (slide layout)<br>III. படவில்லைத் தகவல் (slide transition)<br>IV. படவில்லைகளின் வகைப்படுத்தல் பார்வை (slide sorter view)<br>V. புதிய படவில்லை (new slide) | 5<br>(1x5) |
| (b) | I. DVD Details – DVD_ Code<br>Student Details – Admission _ No – (2 புள்ளிகள்)<br>II. ENG001 ஆனது DVD_Code புலத்தின் கீழ் வருவதனால் அவ்வட்டவணை ஆனது அதனை முதன்மை சாவியாக பயன்படுத்துகின்றது.ஆகவே இது தரவுமீள்பதிவை அனுமதிக்காது.. (3 புள்ளிகள்)<br>III. Admission _ No : Text (or Number)<br>DVD_Code: Text<br>Date_Borrowed : Date / Time (3 புள்ளிகள்)<br>IV. Borrowing _ Details (1002, TAM001, 10/07/2010) (2 புள்ளிகள்) | 10 |
| (05) (a) | 1. வலை மேலோடி<br>2. முகவரிப் பட்டி<br>3. சீர்மை வள இடப்படுத்தி<br>4. மீயிணைப்பு<br>5. இணையம் | 10 |
| (b) | (table below) | 10 |

| | |
|---|---|
| 1. head | 6. hr |
| 2. body | 7. P |
| 3. Center | 8. H3 |
| 4. H1 | 9. ol |
| 5. img | 10. ul |


අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාළ ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

| | | |
|---|---|---|
| | A. – P எப்பொழுதும் காப்பெடுத்தல்.<br>B. – U நச்சுநிரல் எதிர்ப்பு மென்பொருட்கள் பயன்படுத்தல்.<br>C. – R தீச்சுவரினை நிறுவுதல்.<br>D. – T UPS இனை பயன்படுத்தல்.<br><br>*(1.5 x 4= 6 புள்ளிகள்- அனைத்து விடைகளும் சரியாயின் மாத்திரம் 7 புள்ளிகள் வழங்கவும்)* | 7 |
| (b) | 1. கணினி வேம்கள்<br>2. விரும்பா அஞ்சல்<br>3. பிஷிங்<br>4. அனாவசிய விளம்பரங்கள் | 8 |

Past Papers Wiki



වාරෙටම ඕන කරන පොත් එකපාර
ඕඩර් කරලා දැන් ගෙදරටම ගෙන්වා ගන්න
LOL
Book Store
25% OFF
ALL BOOKS
Including Exercise Books,
CR Books, and B5 Books
ඕනෙම අභ්‍යාස පොතකට 25%ක විශේෂ වට්ටමක්
ORDER BOOKS FROM LOL BOOKS STORE
0372060110
WWW.LOL.LK
071 777 4440 (WhatsApp)
Cash On Delivery Available


ORDER GCE A/L
SHORT NOTES, MODEL,
REVISION BOOKS & PAST
PAPERS IN SINHALA, ENGLISH
& TAMIL MEDIUM
LOL
BOOK
STORE
CASH ON DELIVERY
AND KOKO PAYMENT
AVAILABLE
WHATSAPP – 0717774440
WEBSITE: WWW.LOL.LK
GET READY FOR YOUR A/Ls
WITH LOL BOOK STORE!